විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මහලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூ/சுற்றறி/2010 දිනය / திகதி / Date 16.07.2010

ஓய்வூதியச் சுற்றுநிருபம் : 06/2010

மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள்,
முப்படைத் தளபதிகள் அனைவருக்கும்

**ஆயுதப்படைச் சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகளுக்குப் பூரண ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொடுத்தல்**

கீழ்வரும் எண்ணக்கருக்களுக்கு அமைவாக ஆயுதப்படைச் சேவைகளின் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகளுக்குப் பூரண ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

1. பயங்கரவாத யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட 19.05.2009 ஆம் திகதியில் சேவையில் இருந்த ஆயுதப்படைச் சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகள்

I. 22 வருட சேவைக்காலத்தினைப் பூரணப்படுத்தியுள்ள முப்படைகளின் ஆணை பெற்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகள் அத்தினத்தில் அல்லது அதன் பின்னர் ஓய்வு பெறுவதாயின் 85% ஆன குறைக்கப்படாத சதவீதத்தின் கீழ் ஓய்வூதியப் பணிக்கொடையினைக் கணக்கிடுதல் வேண்டும். அதன் படி மாதாந்த ஓய்வூதியம், குறைக்கப்படாத சதவீதம் 85% உம் குறைக்கப்பட்ட சதவீதம் 75% உம் ஆகும்.

II. ஆயுதப்படைச் சேவை ஆண்/பெண் அதிகாரிகள் மற்றும் ஏனைய பெண் அலுவலர்கள் கட்டாய சேவைக்காலத்தினைப் பூரணப்படுத்தி இருப்பின் தற்போது பெறும் ஓய்வூதியச் சதவீதத்திற்கு மேலதிக 15% இனைக் கூட்டுச் சேர்த்து 85% உச்ச அளவினைத் தாண்டா வண்ணம் மாதாந்த ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடையினைக் கணக்கிடுதல் வேண்டும்.

III. 19.05.2009 ஆம் திகதியின் பின்னர் ஓய்வு பெற்று முன்னைய சதவீதங்களின் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டிருப்பின் புதிய சதவீதங்களின் படி திருத்தியமைக்கப்பட்ட விண்ணப்பங்களை இத்திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

IV. 19.05.2009 ஆம் திகதியின் பின்னர் சேவையில் இணைந்துள்ள / இணைகின்ற ஆயுதப்படைச்சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகளுக்கு இச்சதவீதங்கள் ஏற்புடையதாகாது. அவர்களுக்கு இதுவரையிலும் செயற்படுத்தப்பட்ட ஓய்வூதியச் சட்டதிட்டங்கள் அவ்வாறே ஏற்புடையனவாகும்.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

2. 19.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ள ஆயுதப்படைச் சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகள்

I. 19.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்று 22 வருட சேவைக்காலத்தினை பூரணப்படுத்தி மற்றும் குறைந்த பட்சம் 05 வருட காலம் யுத்த முனைகளில் கடமையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகட்கு 85% ஆன மாதாந்த ஓய்வூதியத் திருத்தம் ஒன்றிற்கு உரிமை கிடைக்கும்.

II. ஆயுதப்படைச் சேவை ஆண்/பெண் அதிகாரிகள் மற்றும் ஏனைய பெண் அலுவலர்கள் கட்டாய சேவைக்காலத்தினைப் பூரணப்படுத்தியிருப்பின் மற்றும் 05 வருட காலம் யுத்த முனைகளில் கடமையில் ஈடுபட்டிருப்பின் தற்போது பெறுகின்ற ஓய்வூதிய சதவீதத்திற்கு மேலதிக 15% இனைக் கூட்டுச் சேர்த்து (85% உச்ச அளவின் கீழ்) மாதாந்த ஓய்வூதியத் திருத்தத்திற்கு உரிமைக் கிடைக்கும்.

III. புதிய சதவீதங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட திருத்தப்பட்ட கொடைப்பத்திரத்தினை அவ்அவ் ஆயதப்படைகளின் ஓய்வூதியப் பிரிவுகளினால் பிரதேச செயலாளர்களிடம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்புகையில் குறைந்த பட்சம் 05 வருட காலங்கள் போர் முனைக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததாக ஓய்வூதியப் பரிவுகளின் பிரதானிகள் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

3. சேவை வினைத்திறனின்மையின் கீழ் அல்லது ஒழுக்காற்றுக் காரணங்களின் கீழ் ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ள / செய்யப்படுகின்ற ஆயுதப்படைச் சேவை ஆண்/பெண் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகள் தொடர்பாக மேற்குறித்த விதிமுறைகள் ஏற்புடையனவாகாது இருத்தல் வேண்டும்.

4. இச்சுற்றுநிருபம் பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடனேயே வெளியிடப்படுகின்றது. சம இலக்க ஓய்/சுநி/2010 மற்றும் 29.06.2010 திகதி கொண்ட சுற்றுநிருபம் இரத்துச் செய்யப்படுவதுடன், இச்சுற்றுநிருபம் தொடர்பான மேலதிக அர்த்த விவரணங்கள் அல்லது தெளிவு படுத்தல்கள் தேவைப்படுமிடத்து கீழ்வரும் பிரிவுகளிடம் வினவி அது தொடர்பில் செயற்படுதல் வேண்டும்.

- பிரதிப்பணிப்பாளர் (ஆயுதப்படைப்பிரிவு)011 – 2320439
- பிரதிப்பணிப்பாளர் (கொள்கைப்பிரிவு) 011 – 2329580

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதி :-

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. அமைச்சரவைச் செயலாளர்
3. செயலாளர் - அரச பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு
4. செயலாளர் - நிதி மற்றும் கொள்கைகள் திட்டமிடல் அமைச்சு
5. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
6. ஆயுதப்படை ஓய்வூதியச் சங்கங்கள்
7. கணக்காய்வாளர் நாயகம்